

கழக இளைஞரணி செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு கடலூர் மேற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் பெண்ணாடம் இறையூர் சர்க்கரை ஆலையிலிருந்து திட்டக்குடி வழியாக (ராமநத்தம்) தொழுதூர் வரை மாபெரும் மாரத்தான் போட்டியை அமைச்சர் சி.வி கணேசன் கொடி அசைத்து துவக்கி வைத்தார். உடன் மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் சி.வெ.க. வெங்கடேசன் மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.

# மாணவர்களுக்கு மடிக் கணினி வழங்கும் திட்டம்!

## ஜன. 5 இல் முதல்வர் தொடங்கி வைக்கிறார்!

சென்னை, டிச. 28 – கல்லூரி மாணவர்களுக்கான கட்டணமில்லா மடிக்கணினி வழங்கும் திட்டத்தை வருகிற ஜனவரி 5 ஆம் தேதி அன்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார்.

தமிழ்நாடு அரசுப் பள்ளி மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்கும் திட்டம் செயல்பட்டு வந்தது. இது கரோனா காரணத்தினால் இடைநிறுத்தம் செய்யப்பட்டது.

இதன் பிறகு 2021ல் திமுக வெற்றி பெற்று ஆட்சி பொறுப்பேற்ற பின்னர் அரசு கல்லூரி மாணவர்களுக்கு மடிக்கணினி – கைக்கணினி வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக 2025 – 2026 தமிழ்நாடு பட்ஜெட்டில் அறிவித்த நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு, ”முதற்கட்டமாக, அடுத்த இரண்டு ஆண்டுகளில் 20 லட்சம் கல்லூரி மாணவர்களுக்கு, அவரவர் விருப்பத்தின் அடிப்படையில் ஒவ்வொருவருக்கும் கைக்கணினி அல்லது மடிக்கணினி வழங்கப்படும் எனத் தெரிவித்தார்.

இதனை நிறைவேற்றும் வகையில், முதற்கட்டமாக 10 லட்சம் மடிக்கணினிகளை ஹெச்.பி., டெல், ஏசர் ஆகிய 3 நிறுவ னங்களிடம் இருந்து தமிழ்நாடு அரசு கொள்முதல் செய்தது. மேலும், மாணவர்களுக்கு லேப்டாப் வழங்குவதற்கான ஏற்பாடுகளும் தீவிரமாக செய்யப்பட்டு வருகிறது.

இந்நிலையில கடந்த 18 ஆம் தேதி அன்று துணை முதல மைச்சர் உதயநிதி ஸ்டாலின், ”கல்லூரி மாணவர்கள் கிறிஸ்துமஸ், புத்தாண்டு விடுமுறை முடிந்து கல்லூரிக்கு வந்தவுடன் அவர்களுக்கு லேப்டாப் வழங்கப்படும் எனத் தெரிவித்திருந்தார்.

குறிப்பாக அமெரிக்காவின் Perplexity AI நிறுவனத்தோடு எல்காட் நிறுவனம் ஒரு சிறப்பு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொண்டுள்ளது. அதன்படி 6 மாத காலத்திற்கு Perplexity Pro AI வசதி கல்லூரி மாணவர்களுக்கு இலவசமாக வழங்கப்பட உள்ளது.

இந்நிலையில் வரும் ஜனவரி மாதம் 5ஆம் தேதி சென்னை, நந்தம்பாக்கம், வர்த்தக மையத்தில் பிற்பகல் 3 மணிக்கு நடக்கும் நிகழ்ச்சியில், 10 லட்சம் மாணவர்களுக்கு லேப்டாப் வழங்கும் திட்டத்தை முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைக்கிறார்.

இவ்விழாவில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கிறார்.

இதேபோல், அன்றைய தினம் மாவட்டங்களில் அமைச்சர்கள், மேயர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொள்கின்றனர் என தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.

# பசி தீர்த்த பகலவன் தாயுமானவர் தந்த காலை உணவு!



**வீ**ட்டுப் பசியோடு பள்ளிக்கு வரும் அந்த
விழி நீர் சிந்தும் பிஞ்சு முகங்கள்!
ஏட்டுச் சுவடி ஏந்தும் முன்னே அவர்கள்
வயிறு வாடக்கூடாதெனத் துடித்தது ஒரு நெஞ்சம்!
ஆட்சி அதிகாரம் என்பது அரியணை அல்ல
அது அரவணைக்கும் தாயுள்ளம் என
மெய்ப்பித்தாய்!
வகுப்பறை வாசலில் வறுமை நுழையாமல்
காலை உணவை அமுதமாய் வழங்கினாய்!
அள்ளி அணைக்கும் முதல்வரின் அன்பில்
ஆறாத பசி ஆறிப் போனது!
துள்ளித் திரியும் மழலையர் கூட்டத்தில்
புதியதொரு கல்விப் புரட்சி பிறந்தது!
வெற்று வயிறு பாடம் கற்காது இதை
மண்ணுலகிற்கு உரக்கச் சொன்னாய்!
குழந்தைகளின் படிப்பும் முன்னேற்றமும்
உன் கைகளில் தவழும் நம்பிக்கையானது!
ஊட்டச்சத்துக் குறைபாடு ஒழிந்து போகும்
உற்சாகக் காற்று பள்ளிகள் வீசும்!
சாதி மத பேதமற்ற சமத்துவ பந்தியில்
நாளை சரித்திரம் நம்பிக்கையோடு மலரும்!
உலகிற்கே முன்னோடியான உன்னத திட்டம்!
பசித் தீர்க்க வந்த பாராளும் தாயுமானவர் நீ!
வாழும் சகாப்தம் கலைஞரின் வழியில்
வளரும் பிள்ளைகளின் வாழ்வில் தாயுமானவர்!
நீயே ஒளியானாய் குழந்தைகளின் பசித் தீர்க்க!



**மருத்துவர்**
**ப.முருகதாஸ்**
விருத்தாசலம்

மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில்

# துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு மாபெரும் மாரத்தான் போட்டி!

## அமைச்சர் சி.வி.கணேசன் கொடி அசைத்து தொடங்கி வைத்தார்!

*கடலூர், டிச. 28 - கழக இளைஞரணி செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, கடலூர் மேற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் மாநில அளவிலான மாரத்தான் ஓட்டப்பந்தயம் விமரிசையாக நடைபெற்றது. இப்போட்டியை அமைச்சர் சி.வெ. கணேசன் கொடி அசைத்து துவக்கி வைத்தார். திட்டக்குடி அடுத்துள்ள பெண்ணாடம் இறையூர் சர்க்கரை ஆலையில் இருந்து ராமநத்தம் பேருந்து நிலையம் வரையிலான 23 கிலோ மீட்டர் தூரம் ஆண்களுக்கான மாரத்தான் ஓட்டப் பந்தயம் நடைபெற்றது.*

*திட்டக்குடி சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் இருந்து ராமநத்தம் பேருந்து நிலையம் வரையிலான 13 கிலோமீட்டர் பெண்களுக்கான மாரத்தான் ஓட்டப் பந்தயம் நடைபெற்றது.*

*இந்த மாரத்தான் போட்டியில் கடலூர் மாவட்டம் மட்டுமின்றி, தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த ஏராளமான வீரர், வீராங்கனைகள் கலந்து கொண்டு தங்களின் உடல் தகுதியையும் விளையாட்டு திறமையையும் வெளிப்படுத்தினர். இளைஞர்கள், மாணவர்கள் மற்றும் பொது மக்கள் பெருந்திரளாக கலந்து கொண்டு நிகழ்ச்சியை உற்சாகமாக்கினர்.*

*விளையாட்டு வளர்ச்சிக்கும், உடல் ஆரோக்கியம் குறித்த விழிப்புணர்வையும் ஏற்படுத்தும் நோக்கில் இந்த மாரத்தான் போட்டி நடத்தப்பட்டதாக கடலூர் மேற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் தலைமைக் கழக இளம் பேச்சாளர் சி. வெ.க.வெங்கடேசன் நன்றியுரை ஆற்றினார்.*

*போட்டியின் வழித்தடங்களில் போக்குவரத்து மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகளை காவல்துறை சிறப்பாக மேற்கொண்டது.*

*போட்டியின் முடிவில் வெற்றி பெற்றோர்களுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இந்நிகழ்ச்சியில் மாவட்ட நிர்வாகிகள், விளையாட்டு ஆர்வலர்கள் மற்றும் அரசியல் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.*



தென்காசி வடக்கு மாவட்டம் குருவிகுளத்தில் அண்ணல் காந்தியடிகளின் பெயரை நீக்கி 100 நாள் வேலைத்திட்டத்தை ஒழிக்கும் சட்டத்தை கொண்டு வந்த ஒன்றிய பா.ஜ.க. அரசையும்,ஒத்து ஊதும் அ.தி.மு.க. வையும் கண்டித்து மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியின் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. தலைமையில் ஒன்றிய செயலாளர்கள் கடற்கரை ,சேர்மத்துரை,கிறிஸ்டோபர், குணசேகரன்,பொருளாளர் சரவணன், பொதுக்குழு உறுப்பினர் பராசக்தி, ம.தி.மு.க.சுதா பாலசுப்பிரமணியன், ஒன்றிய குழு தலைவர் விஜயலட்சுமி, வழக்கறிஞர் அணி பிச்சையா, காங்கிரஸ் கட்சி சுந்தர்ராஜ்,கம்யூனிஸ்ட் கட்சி முத்துப்பாண்டியன்,வி.சி.க.கனியமுதன் ஆதி தமிழர் பேரவை மதன், தமிழ் புலிகள் தமிழ் வேந்தன், திருவேங்கடம், பேரூர் செயலாளர் மாரிமுத்து ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. நிகழ்வில் கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள், பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

# ஆளுமைத் திறன் படைத்த துணை முதல்வர்!



**இ**ளைஞர் அணி மண்டல மாநாடு திருவண்ணாமலையில் வெற்றிகரமாக நடந்து முடிந்துள்ளது. லட்சக்கணக்கானவர்கள் கலந்து கொண்ட கட்டுப்பாட்டுடனும் கட்டுப் கோப்புடனும் நடந்த மாநாடாகும். தி.மு.கவை தவிர இப்படியொரு மாநாட்டை எவராலும் நடத்திட முடியாது.

சேதாரம் இன்றி நகை செய்ய முடியாது என்பார்கள் ஆனால் இந்த இளைஞர் அணி மாநாட்டில் எந்த சேதாரமும் சிராய்ப்பும் ஏற்படவில்லை.

முதல்வர் கனவில் இருக்கிற என்பதை விட ஆசையுடன் அலைகிற பலருக்கும் இந்த மாநாடு வயிற்றில் புளியைக் கரைத்துள்ளது. அதனால் சிலர் படுத்தவர்கள் எழவேயில்லையாம். முடக்கு வாதம் வந்தவர்கள் போல் சிலர் முடங்கிப் போய் மூளையில் கிடக்கிறார்களாம். எடப்பாடி பழனிச்சாமியோ மகாபாரதத்தில் வருகிற சகுனியைப் போல் என்னசெய்வது என்று சிந்திக்கத் தொடங்கி விட்டார்.

இன்றைய முதல்வர் அண்ணன் தளபதி என்று இளைஞரணிச் செயலாளராக பொறுப்பேற்றாரோ அதிலிருந்து உதய சூரியனைப் போன்ற அவரது ஓயாத உழைப்பால் இளைஞரணியை வலிமையாக்கி இளைஞர்களுக்கு பயிற்சி வகுப்புகள் மூலம் அரசியலை அதுவும் அடாவடி அரசியல் அல்ல அறம் சார்ந்த அரசியல் தமக்குள்ள கடமையுணர்வையும் கட்டுப்பாடு காப்பதையும் கண்ணியம் பேணுவதையும் சொல்லித் தந்து இளைஞர்அணியை வழி நடத்தினார்.

தி.மு.க இளைஞரணி என்றால் எதிரிகூட விருப்பமுடன் பார்க்கும் பார்வை தான் இருந்தது. பதறற்ற எல்லாம் பயனுள்ள நெல்மணிகளாகத்தான் இருந்தார்கள். இளைஞர் அணி தலைவர் முத்துவேலர் பேரன் தளபதியன்றோ பிறகென்ன இளைஞர் அணியினர் எல்லோரும் முத்துக்களும் மாணிக்கங்களும்தான். எந்த இழுக்கும் அவர்களால் கழகத்திற்கு வந்ததில்லை.

இளைஞரணி மாவட்ட கூட்டமென்றால் அது மாபெரும் மாநாடாகத் தான் இருக்கும். மாவீரன் நெப்போலியன் போல் செயலாளர் தளபதி இருந்தால் விழுந்து கிடப்பவன் கூட எழுந்து ஓடி வருவானே! இராஜராஜ சோழன் போர் என்று அழைக்கு முன்னே புறப்பட்டோம் மன்னா என்று வில்லோடும் வேளோடு புறப்பட்ட நம் முன்னோர்கள் வீரர்கள் வாழ்ந்த சோழ தேசத்தில் பிறந்த மாண்புமிகு.ஸ்டாலின்சோழன்


ஆணையிடவா வேண்டும் அனல்கக்கும் பார்வைக்கே ஆர்ப்பரித்து அணிவகுத்து எதிரிகளின் அரண் தகர்க்க அஞ்சாத படையாக இருந்தது தானே இளைஞர் அணி.

அண்ணன் தளபதி நடத்திய மாநாடுகள் வங்கக்கடலே வந்து புகுந்தது போன்று இளைஞர்கள் தலைகள் இருக்கும் என்றால் அதை மறுப்பாரும் உண்டோ! அன்று உழைத்த உழைப்பு தான் இன்றும் முதல்வர் இளமை குறையாமல் இருப்பதற்கு முக்கிய காரணம்.

கழகத் தலைவரானார். தளபதி அவர்கள் சந்தித்தத் தேர்தல் களிளெல்லாம் வெற்றி! வெற்றி! வெற்றி முழக்கம் தான். அதனால் அவரது சிந்தையில் உலகம் போற்றும் உன்னதத் திட்டங்கள் மக்கள், மாணவ கண்மணிகளுக்காக வந்து விழுகின்றன. அண்டை மாநிலங்கள் மட்டுமல்ல கண்டம் தாண்டி கனடாவும், இங்கிலாந்தும் அமல்படுத்தும் திட்டங்களை தந்து தமிழனின் சிந்தனையை கண்டு மற்ற இனங்கள் பெருமைப்படும் வண்ணம் செய்திருக்கிறார் நம்முதல்வர். இந்த ஆளுமைத் திறன் இளைஞர் அணி செயலாளராக இருந்தபோது கிடைத்த அனுபவம் மற்றும் பயிற்சி.

புலிக்கு பிறந்தது புலியாகத் தானே இருக்கும். துணை முதல்வர் சகோதரர் உதயநிதி ஸ்டாலின் செயலாளராக பொறுப்பேற்ற பின் மெருகேற்றம் அதிகரித்தது. கழகத்தினர் ரசித்தனர். கவலைப்பட வேண்டியவர்கள் தி.மு.கவை இனி எவராலும் அழிக்க முடியாது என்று முக்கவும் முனகவும் தொடங்கினர். மூச்சைக் கூட சிரமப்பட்டுத் தான் விடுகின்றனராம்.

**வி.பி.கலைராஜன்**
*கழக இலக்கிய அணி செயலாளர்*



பொறுப்பேற்ற நாள்முதல் எதிரிக்கு நெருப்பாக தெரிந்திட்டார். இளைஞர் அணியினருக்கு தேனாகத் தித்தித்தார். இத்தாலி சீர்கு லைந்து போனபோது எப்படி இளைஞர் மாஜினி என்ற மாவீரன் இளைஞர்கள் இயக்கத்தை உருவாக்கி எலும்புருக்கி நோயால் பாதித்ததைப் போல் இருந்த இத்தாலியை எதையும் எதிர் கொண்டு வெல்லும் இத்தாலியாக மாற்றிக் காட்டினார்.

அதேபோல் வியட்நாம் முதலில் பிரான்ஸால் ஒடுக்கப்பட்ட போதும் அதன்பின் அமெரிக்காவால் தாக்குதலுக்கு ஆளான போதும் ஒரு கப்பலில் காபி கப் கழுவும் வேலையைப் பார்த்துக் கொண்டே பல லட்சம் வியட்நாமியர் இனப்படுகொலை செய்யப்பட்டபோதும் உறுதி குலையாத மனதுடன் களத்தில் நின்று போராடியவர் தான் மாவீரன் ஹோசிமின். ஒரு பெண் குழந்தை நிர்வாணமாக குண்டடிப்பட்டு அலறிக் கொண்டு ஓடி வர உலக மக்கள் அதைச் செய்திகளில் பார்க்க அமெரிக்காவில் மக்கள் ஒன்றாகிப் போரை நிறுத்த அமெரிக்கா வெளியேற வேண்டும் என்றவுடன் அமெரிக்கா போரை நிறுத்தியது.

இந்த இரண்டு சம்பவங்களை மட்டும் நான் இங்கே ஏன் குறிப்பிடுகிறேன் என்றால் திருவண்ணாமலை மாநாட்டில் ஆற்றல் மிக்க அமைச்சர் எ.வ.வேலு நின்று நிதானித்து இளைஞர் அணி செயலாளரின் செயல்பாடுகளை நன்கு அறிந்த காரணத்தால் சகோதரர் உதயநிதி அவர்களை ‘இளம் பெரியார்’ என்று மகிழ்ந்து கூறினார்.

இதில் என்ன தவறு இருக்கிறது? தன் கட்சியின் துணை முதல்வர் புடம் போட்டத் தங்கம். அவர் பொறுப்பேற்றப் பின்னோ பாய்கின்ற புலியானார். தந்தையைப் போல் ஓயாமல் உழைக்கிறார். பகுத்தறிவு கொள்கையை பின்பற்றுவதில் பக்குவமடைந்தவராக இருக்கிறார்.

தமிழைப் பூஜிக்கிறார் தமிழினத்தை உளமார நேசிக்கிறார்.

எல்லாவற்றுக்கும் மேலாக திராவிடக் கழக தலைவர் ஆசிரியர் கி.வீரமணியால் பாராட்டப்படுகிறார். தந்தை பெரியார் ஒருவருக்கு சிலை வைக்க விரும்பினாரென்றால் அது கலைஞருக்குத்தான். அதற்குள் பெரியார் மறைந்தார். மணியம்மையாரும், ஆசிரியர்.வீரமணியாரும் கலைஞருக்கு சிலை வைத்தார். அந்த கலைஞரின் பேரன் தான் சகோதரர் உதயநிதி.

பாண்டிச்சேரியில் சுயமரியாதை இயக்கம் சார்பாக நாடகம் நடத்தி விட்டு வந்தபோது கலைஞரையும் பாவேந்தரையும் காங்கிரஸ் குண்டர்கள் கடுமையாக தாக்கினர். கலைஞரை இறந்து விட்டார் என்று சாக்கடை ஓரம் தூக்கி வீசி சென்றனர். கலைஞர் ஒரு தாயால் காப்பாற்றப்பட்டார். அச்சமயம் தந்தை பெரியார் துடிதுடித்துப் போனார். பின்னர் கலைஞரை உயிருடன் கண்டவுடன் அப்படியே அவரை காப்பாற்றி,

ஈரோட்டுக்கு தன்னோடு அழைத்துச் சென்று குடியரசு நாளிதழில் துணை ஆசிரியர் ஆக்கினார். கலைஞரை முதலமைச்சராக அமரச் சொன்னதும் தந்தை பெரியார்தான். அந்தக் கலைஞரின் பேரன் தான் சகோதரர் உதயநிதி.

சனாதனத்தை தந்தை பெரியார் கடுமையாக வாழ்நாளெல்லாம் எதிர்த்தார். இறக்கப் போகும் நேரத்தில் கூட சூத்திரன் என்பதை நீக்காமலேயே இறக்கிறேனே என்று வருத்தப்பட்டார்.

அந்த சனாதனத்தை ஒழிப்பேன் என்றவர் துணிச்சல் மிக்க சகோதரர் உதயநிதி ஸ்டாலின். பல்வேறு மாநிலங்களில் மத வெறியர்கள் மனுதர்மத்தை நம்புகிறவர்கள் வழக்குகள் போட்டனர். நீதிமன்றத்தில் பேசியதை வாபஸ் பெறுவீர்களா என்று நீதிபதி கேட்டபோது,

சனாதனத்தை ஒழிப்பேன் என்பதில் உறுதியாக இருக்கிறேன். வாபஸ் வாங்க மாட்டேன் என்றவர் தான் சகோதரர் உதயநிதி ஸ்டாலின். மதவெறியர்கள் மன்னிப்பு கேட்கச் சொன்னார்கள். மன்னிப்பு கேட்க மாட்டேன் விளைவை சந்திக்கத் தயார் என்றார் சகோதரர் உதயநிதி. அங்குதான் அவர் இன்றைய இளம் பெரியாராக காணப்படுகிறார்.

பெண்கள் படிக்கக் கூடாது என்கிறது மனுநீதி. ஆனால் பெண்கள் கண்டிப்பாக படிக்க வேண்டும் என்றார் பெரியார். அதேபோல் பெண்கள் படிப்பது அவசியம் என்றதோடு விளையாட்டிலும் பெண்கள் கட்டாயம் கலந்து கொள்ள வேண்டும் என ஊக்கப்படுத்தினார்.

முதல்வரிடம் கூறி உபகரணங்கள் வாங்க முடியாதவர்களுக்கு நிதி வழங்க வழிவகுத்தார். இப்படி பல கோடி நிதி விளையாட்டு வீராங்கனைகளுக்கு வழங்கியவர் சகோதரர் உதயநிதி ஸ்டாலின்.

அதன்பின் பல சர்வதேச போட்டிகளில் வெற்றி பெற்று தமிழ்நாட்டிற்கு மட்டுமல்ல இந்தியாவுக்கும் பெருமை சேர்த்து வருகின்றனர். தற்போது கூட கேரம் விளையாட்டில் உலகளவில் வென்று மூன்று தமிழ் வீராங்கனைகள் வெற்றி பெற்றுள்ளனர். இது சகோதரர் உதயநிதி ஸ்டாலின் மூலமே சாத்தியமானது.

ஜாதி மதம் ஒழிக்கப்பட வேண்டுமென்றார் தந்தை பெரியார். அதேபோல் ஜாதி மதத்தின் ஆணிவேரை அறுத்தெறிய வேண்டுமென்கிறார் சகோதரர் உதயநிதி. இதில் பெரியாரின் மறுவடிவமாகவே சகோதரர் உதயநிதி திகழ்கிறார் என்றால் யாராலும் மறுக்க முடியாது.

பகுத்தறிவு கொள்கையை பரப்பியவர் தந்தை பெரியார். அந்த கொள்கையை அப்படியே பின்பற்றுவதோடு பிறரையும் பின்பற்ற சொல்கிறார் சகோதரர் உதயநிதி ஸ்டாலின். சிறுபான்மையினரின் பாதுகாவலராக விளங்கி தந்தை பெரியாரின் வழித்தோன்றலாக விளங்கி வருகிறார் சகோதரர் உதயநிதி அவர்கள். பெரியார் திடலுக்குச் சென்று முழங்கியதோடு பெரியாருக்கும் தம் வீரவணக்கத்தைச் செலுத்தினார்.

மாநில உரிமைக்காக ஓங்கி குரல் கொடுக்கிறார். இந்தியை கடுமையாக எதிர்க்கிறார். இதைத்தான் தந்தை பெரியாரும் செய்தார்.

இந்தியை ஏற்றுக் கொண்டால் தான் கல்வி நிதி தரப்படும் என்றது ஒன்றிய மோடியின் மைனாரிட்டி அரசு. இந்தியை ஏற்றுக்கொண்டால் 10000 கோடி தருகிறேன் என்றாலும் ஏற்க மாட்டோம் என்றார் நம்முதல்வர். அதைத் தான் நம் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினும் கூறுகிறார். இந்திக்காக முதன் முதலில் 1938ல் நடராஜன் தாளமுத்து இறப்பதற்கு முன்பே இந்தியை எதிர்த்து போராட்டம் நடத்தியவர் தந்தை பெரியார். அவர் வழியில் தான் இந்திக்கு எந்நாளும் எம் தமிழ் மண்ணில் இடமில்லை என்கிறார் சகோதரர் உதயநிதி ஸ்டாலின்.

ஒருமுறை நான் தீபாவளி நாளில் சகோதரர் உதயநிதி அவர்களுக்கு செல்பேசியில் தொடர்பு கொண்டு தீபாவளி வாழ்த்து சொன்னேன். உடனே அவரோ நமக்கு ஏது தீபாவளி, நான் தீபாவளி கொண்டாடுவதில்லை என்றார். தந்தை பெரியாரும் தீபாவளி பண்டிகையை முட்டாள்தனமான பண்டிகை என்றார். பெரியார் கொண்டாடியது தமிழர் திருநாள் பொங்கல்தான். இதிலும் நான் பெரியாரை அவரிடம் கண்டேன்.

சமூகநீதியை நிலைநாட்ட வேண்டும் என்றவர் தந்தை பெரியார். வர்ணாசிரமத்தில் நம்பிக்கை உண்டு என்றார் காந்தியடிகள். அன்றே காங்கிரஸிலிருந்து வெளியேறினார் பெரியார். தந்தை பெரியாரின் கொள்ளுப் பேரன் சகோதரர் உதயநிதி ஸ்டாலினும் சமூகநீதியை நிலைநாட்டுவதற்கு முன்னுரிமைத் தருகிறார்.

அதேபோல் பொதுவுடமை கொள்கைக்காக பசியையும் பட்டினியையும் தாங்கி உழைக்கும் மக்கள் வாழ்வில் உயர வேண்டுமென உழைத்தார், படித்தார் எழுதி எழுதிக் குவித்தார். அதனால் மூலதனம் புத்தகம் கிடைத்தது. அதையே கொள்கையாக ஏற்று கார்ல் மார்க்ஸ் வழியை கடைப்பிடித்து லெனின் ரஷ்யாவை உருவாக்கினார். பின்பு சோவியத் யூனியன் ஆனது. அன்று மாமேதை லெனினை மக்கள் வாழும் கார்ல் மார்க்ஸ் என்றனர். மார்க்ஸ் ரஷ்யாவில் பிறந்தவர் அல்ல. ஆனால் ரஷ்யர்களாலும் ஐரோப்பியர்களாலும் நேசிக்கப்பட்டவர்.

அதனாலேயே கார்ல் மார்க்ஸ் என்று அவரைப் போல வாழ்ந்த லெனினை அழைத்தனர்.

‘உலகம் சுற்றும் வாலிபன்’ படப்பிடிப்பு வெளிநாடு செல்கிறார் எம்.ஜி.ஆர். அப்போது அவரை வழியனுப்ப விமான நிலையம் செல்கிறார் கலைஞர். அதன் பின் எம்.ஜி.ஆர் கலைஞரை இரண்டாம் அண்ணா என்றார். இப்படி சொன்னதால் அண்ணாவாக கலைஞரை பார்த்தார் எம்.ஜி.ஆர். அப்போது அண்ணாவா கலைஞர் என்று யாரும் கேட்கவில்லை.

இப்போது தந்தை பெரியாரை பின்பற்றும் சகோதரர் உதயநிதி அவர்களை இன்றைய காலத்திற்கு கிடைத்த பெரியாராக பார்த்துள்ளார் அமைச்சர் எ.வ.வேலு. அதனால்தான் இளம் பெரியார் என்று இதயமுற அழைத்தார். ஏன் நானும் அப்படியே அழைக்கிறேன் இதில் என்ன தவறு இருக்கிறது?

கலைஞரை இரண்டாம் அண்ணா என்று எம்.ஜி.ஆர் சொன்னதும் லெனினை கார்ல் மார்க்ஸ் என்று சொன்னதும் சரியென்றால் சகோதரர் உதயநிதி ஸ்டாலினை இளம் பெரியார் என்று சொன்னதும் சரியே. வயித்தெரிச்சலில் வம்பு பேசுபவர்களே, முதலில் தந்தை பெரியார் கொள்கையைப் பின்பற்றுங்கள் அல்லது முயற்சியாவது செய்யுங்கள். அதன் பிறகு உணர்ந்து பார்த்து விமர்சனம் செய்ய முடிந்தால் விமர்சனம் செய்யுங்கள். வாழ்க தந்தை பெரியார்! வாழ்க இளம் பெரியார் உதயநிதி ஸ்டாலின்!